

இன்றைய செய்தி நாளைய வரலாறு

முரசொலி

நிறுவனர் : கலைஞர் மு. கருணாநிதி

வியாழக்கிழமை 10.09.2026


# தரங்கெட்ட விஜய்!

**தமிழ்நாட்டின் அரசியல் வரலாற்றில் இதுவரை எத்தனையோ முதலமைச்சர்கள் வந்துள்ளார்கள். அவர்களில் சிலர் மீது அரசியல் ரீதியான, கொள்கை வழிப்பட்ட விமர்சனங்கள் நமக்கு உண்டு. ஆனால் தமிழ்நாட்டு வரலாற்றில் தரங்கெட்ட முதலமைச்சர் என்றால் இப்போது இருக்கும் விஜய்தான். கோட்டையை ஒரு அசிங்கத்தின் கையில் கொடுத்துவிட்டு தமிழ்நாடு அவமானப்பட்டு நிற்கிறது.**

அசிங்கமான படங்களில் நடித்து, அருவெறுப்பான காட்சிகளில் நடித்து, ஆபாசத்தையே மூலதனம் ஆக்கி ஹீரோவா ஆனவர் என்பதால் அதையே அரசியலிலும் அரங்கேற்றுகிறார் விஜய். அவரவர் புத்தி அவரவர் பேச்சில் தெரியும் என்பார்கள். அதைத்தான் ஒவ்வொரு நாளும் மெய்ப்பித்துக் கொண்டு இருக்கிறார்.

திராவிட முன்னேற்றக் கழகத்தை விமர்சிக்கிறார் என்பதால் நமக்கு கோபம் இல்லை. திராவிட முன்னேற்றக் கழகம் விமர்சனத்தால் வளர்ந்த இயக்கம். திட்டத் திட்டத்தான் தி.மு.க. அதிகமாக வளரும். அப்படித்தான் வளர்ந்து வருகிறது.இதுவரை தி.மு.க.வை, அதன் கொள்கை பிடிக்காமல் திட்டியவர்கள் கூட, தி.மு.க.வின் தியாகத்தை கொச்சைப்படுத்த மாட்டார்கள். ஆனால் முதன்முதலாக தியாகத்தைக் கொச்சைப்படுத்தி விஜய் பேசி இருக்கிறார். ஏனென்றால் அவர் தியாகம் செய்து வளர்ந்தவர் அல்ல. அவர் செய்த தியாகம் என்பது தனது மானத்தை விலை பேசி விற்றதுதான். விலைக்கு ஏற்ற வகையில் மானத்தை கூவிக்கூவி, கூறுபோட்டு விற்றவர் அவர்.

**‘மானமுள்ள ஆயிரம் பேரிடம் சண்டையிடலாம். மானத்தைப் பற்றிக் கவலைப்படாத ஒருவனிடம் சண்டை போட முடியாது’ என்பார் தந்தை பெரியார். விஜய் எல்லாம் இத்தகைய ஜென்மம்தான்.**

மனைவி விவாகரத்து கேட்டார். இது வழக்கமாய் குடும்ப நல நீதிமன்றங்களில் நடக்கும் விவகாரங்களைப் போல அல்ல. **‘என் கணவருக்கு இன்னொரு நடிகையுடன் திருமணத்தை மீறிய உறவு இருக்கிறது.’** என்றார். இதற்கு கணவர் விஜயின் ரியாக்ஷன் என்ன? **‘இதெல்லாம் அந்தளவுக்கு வொர்த் இல்லை’** என்பதுதான். இப்படி ஒரு குற்றச்சாட்டு வந்தால் மானஸ்தன் செய்ய வேண்டியதை விஜய் செய்யவில்லை. ஒரு நடிகையை அழைத்துக் கொண்டு பொது நிகழ்ச்சிக்கு வந்தார். இதுதான் விஜயின்தரம் ஆகும்.

நீலாங்கரையில் உள்ள தனது வீட்டில் தங்குவதற்கு எனக்கு அனுமதி வேண்டும் என்று மனைவி சங்கீதா வழக்கு தாக்கல் செய்தார். தன்னோடு மனைவி தங்குவதற்கு கூட அனுமதி தராதவர்தான் விஜய்.

சர்க்காரியா கதை அனைவருக்கும் தெரியும். புகார் கொடுத்தவரே ஆதாரம் இல்லை என்று சொல்லிவிட்டார்.

தேர்தலில் ஒருவர் வெற்றி பெறுவதும், தோல்வி அடைவதும் பொது வாழ்க்கையில் இயல்பானதுதான். அதற்காக, ‘எங்க உங்கப்பாவையே காணோம்’ என்று கேவலப்படுத்தி விஜய் பேசியதை, **‘அப்பாவிடம் இருந்து விலகி இருக்கும்’** அவரது இரண்டு பிள்ளைகளும் பார்த்து என்ன நினைத்திருப்பார்கள்? ‘இப்படிப் பேச இவருக்கு என்ன அருகதை’ என அவர்களுக்குள் பேசி இருக்க மாட்டார்களா?

கண்ணதாசன் எழுதினாராம். இந்த நொண்ண தாசன், சட்டமன்றத்தில் மேற்கோள் காட்டுகிறார். கண்ணதாசன் எழுதிய **‘உள்ளும் புறமும்’** புத்தகத்தை மேற்கோள் காட்டத் தைரியம் உண்டா விஜய்க்கு? **‘அரங்கமும் அந்தரங்கமும்’** என்று கண்ணதாசன் ஒரு கதை எழுதினார். அரசியல்வாதி ஆகிவிடும் நடிகர் ஒருவரின் நடவடிக்கைகள் மொத்தமாக அதில் இருக்கும். புட்டுப் புட்டு வைத்திருப்பார் கண்ணதாசன். இந்த நூறு நாட்களுக்கு அப்படியே பொருந்தும். அதையே பாடமாக வைத்துக் கொண்டு ஆட்சி கூட நடத்தலாம்.

**அசிங்கமான கவர்ச்சியால் ஹீரோ ஆகி, அதையே அரசியலிலும் புகுத்தி, பொய்யான வீடியோக்களை துணை நடிகைகளைப் பேச வைத்து எடுத்து பரப்பி, அதையும் நம்ப வைத்து, இறுதியாக குழந்தைகளை மெஸ்மரிஷம் செய்து வீட்டில் அடம்பிடிக்க வைத்து வாக்குகளைத் திருடி அரைகுறை வெற்றியைப் பெற்று தி.மு.க. கூட்டணிக் கட்சிகளை அமைச்சர் பதவி தந்து வளைத்து பல்வேறு குதிரை பேரங்களின் மூலமாக முதலமைச்சர் ஆன விஜய்க்கு முதலில் தேவை நாவடக்கம்.**

மண்டபத்தில் எழுதித் தருகிறவர்கள் எதையும் எழுதுவார்கள். மாட்டிக் கொள்ளப் போவது விஜய்தான். அவர் இப்போது சொன்ன ஒவ்வொரு சொல்லுக்கும், எழுத்துக்கும் அவர்தான் வாழ்நாளில் பொறுப்பேற்க வேண்டும். **‘நாவினால் சுட்ட வடு மாறாது’**. அந்த வடு, விஜய்யை வறுத்தெடுக்கும். அவருக்கு உள்ளம் இருக்கிறதா? உள்ளம் இருக்க வேண்டிய இடத்தில் பள்ளம் இருக்கிறதா? என்றுதான் கேட்க வேண்டி உள்ளது.

சினிமாவில் பிழைக்கும் போது கலைஞர் குடும்பம் தேவைப்படுகிறது. கலைஞருக்கு சிலை வைப்பேன் என்பது. **‘உதயநிதி, தயாநிதி, கலாநிதி... எல்லாம் பெயர்கள் அல்ல. ஒவ்வொன்றும் ஒவ்வொரு டைட்டில்’** என்று சொன்னதும் இதே விஜய் தான். முரசொலி மாறன் தபால் தலையை பிரதமர் மன்மோகன் வெளியிட பெற்றுக் கொண்டவர் விஜய். அதாவது தனக்கு ஆதாயம் எந்த நேரத்தில் எதுவோ அதற்கு தலையாட்டி வந்துள்ளார் விஜய். இதற்கு வேறு மாதிரியாகத்தான் பெயர் வைக்க வேண்டும்.

**சட்டசபை மாண்பைக் குலைத்துவிட்டார், அவை மரபுக்கு எதிராகப் பேசுகிறார் என்று இதனை குறைத்து மதிப்பிட்டு விடக் கூடாது. மாண்பு இல்லாதவர் கையில் அதிகாரம் போனால், மாண்பு தெரியாதவர் கையில் பதவி போனால் என்ன ஆகும் என்பதற்கு உதாரணம் விஜய் பேச்சு.**

●●

## சட்டமன்ற மாண்புகளை மீறி அவையில்

# முதலமைச்சர் பேசியதை நீக்கக்கோரினால் வெளியேற்றுவதா?

## எதிர்க்கட்சிக் கொறடா எ.வ.வேலு பேட்டி!

**சென்னை, செப். 10 -**

**சட்டப்பேரவையில் முதல்வர் பதிலுரையில் ஆதாரமில்லாத குற்றச்சாட்டுகளையும் நீதிமன்ற விசாரணையில் உள்ளதைப் பற்றியெல்லாம் பேசியதை அவைக் குறிப்பில் இருந்து நீக்க வேண்டும் என்று கழகக் கொறடா எ.வ.வேலு வைத்த கோரிக்கையை சபாநாயகர் ஏற்காத நிலையில், கழக உறுப்பினர்கள் எழுந்து முழக்கம் எழுப்பினர்.**

**இதையடுத்து பேரவைத் தலைவர், அவைக் காவலர்களால் கழக உறுப்பினர்களை வெளியேற்ற உத்தரவிட்டதையடுத்து கழக உறுப்பினர்கள் குண்டுகட்டாக தூக்கி வெளியேற்றப்பட்டனர்.**

இதையடுத்து தலைமைச் செயலக வளாகத்தில், சட்டமன்ற கழகக் கொறடா செய்தியாளர்களுக்கு அளித்த பேட்டி வருமாறு:-

நம்முடைய எதிர்க்கட்சித் தலைவர் அவர்கள், சட்டமன்றத்திலே மானியக் கோரிக்கையில் பேசுகிற பொழுது, காவல்துறை மற்றும் சட்ட ஒழுங்கு சம்பந்தப்பட்ட செய்திகளை எடுத்து வைத்தார்.

### சட்டம் – ஒழுங்கு சீர்கேடு! பதில் இல்லை!

குறிப்பாக, தமிழ்நாட்டில் 550 குற்றங்கள் நடைபெற்றிருக்கின்றன; அதில் 200 கொலைகள் நடைபெற்றிருக்கின்றன; 300க்கும் மேற்பட்ட பாலியல் வன்கொடுமைகள் நடைபெற்றிருக்கின்றன; 8 காவல் மரணங்கள் நடைபெற்றிருக்கின்றன; 10 ஆவணக் கொலைகள் நடைபெற்றிருக்கின்றன என்று, இந்த 116 நாட்களில் இவையெல்லாம் நடைபெற்றிருக்கின்றன என எதிர்க்கட்சித் தலைவர் தமிழ்நாட்டின் சட்ட ஒழுங்கு சீர்கேட்டைப் பற்றித் தன்னுடைய உரையில் சொல்லியிருந்தார்.

இதற்கெல்லாம் நேற்று தமிழ்நாட்டின் முதலமைச்சர் அவர்கள் பதில் சொல்வார் என்று நாங்கள் எல்லாம் எதிர்பார்த்தோம். இன்னும் சொல்லப்போனால், முதலமைச்சர் அவர்கள் ஏறத்தாழ 27 நிமிடங்கள் பேசிக் கொண்டிருந்தார். நாங்கள் அமைதியாக அவர் பேசுவதையெல்லாம் கேட்டுக்கொண்டுதான் இருந்தோம்.

### நீதிமன்றத்தில் வழக்கு – சட்டமன்றத்தில் விவாதிக்கக் கூடாது!

அந்த நிலையில்தான், திட்டமிட்டு, குறிப்பாகச் சட்டமன்ற விதி 92இல் என்ன சொல்கிறது என்றால், நீதிமன்றத்தில் இருக்கிற வழக்கைப் பொறுத்தவரை சட்டமன்றத்தில் விவாதிக்கக் கூடாது என்று பேரவைத் தலைவர் கொடுத்த விதிப் புத்தகத்தில் இருக்கிறது. ஆனால், முதலமைச்சர் அவர்கள் ஈ.டி. பற்றிப் பேச ஆரம்பித்தார். ஈ.டியில் நீதிமன்றத்தில் இப்படி எல்லாம் இருக்கிறது என்று அந்த அஃபிடவிட்டை முழுமையாகப் படித்தார். அது சட்டப்படி படிக்கக் கூடாது, அதை அவர் படித்தார்.

அதோடு மட்டுமல்லாமல், அதற்கு அடுத்தபடியாக ‘மிசா’ பற்றி ஆரம்பித்தார். மிசாவைப் பற்றிப்



பேசுவதோடு மட்டுமல்லாமல், அவர் ஏற்கனவே சிறந்த நடிகர் என்கிற காரணத்தினால், அவருக்கே உரித்தான ‘பாடி லாங்கு வேஜ்’ எல்லாம் செய்தார். அதையெல்லாம் நீங்களே பார்த்திருப்பீர்கள், அதையெல்லாம் சொல்லி நான் அதிக நேரத்தை எடுத்துக் கொள்ள விரும்பவில்லை.

### மிசாவை கொச்சைப்படுத்தும் முதலமைச்சர்!

மிசா என்பது நாட்டில் அனைவருக்கும் தெரியும். ஒரு காலத்தில் ஜனநாயகக் கொடுமை, யாரும் பேசக் கூடாது, எழுதக் கூடாது என்ற நிலைமை இருந்த பொழுது, 60 ஆண்டுகால பொது வாழ்க்கைக்குச் சொந்தக்காரரான எங்களுடைய கழகத் தலைவர் அவர்கள் மிசாக் கொடுமையில் இருந்தார். ஆனால், மிசாவைப் பற்றிப் பேசினார்; அந்தத் தியாகத்தைக் கொச்சைப்படுத்திப் பேசினார்.

அதோடு மட்டுமல்லாமல், அதற்கு அடுத்தபடியாக சர்க்காரியா கமிஷன் பற்றிப் பேசினார். சர்க்காரியா கமிஷன் என்பது இந்த மாமன்றத்தில் பலமுறை விவாதிக்கப்பட்டு, நம்முடைய நெஞ்சமெல்லாம் நிறைந்திருக்கும் அன்புத் தலைவர் அருமை அண்ணன் கலைஞர் அவர்கள் அதற்குப் பல்வேறு நிலைகளில் பதில் சொல்லியிருக்கிறார்.

### ஆதாரமில்லாத குற்றச்சாட்டு!

1972இல் சர்க்காரியா கமிஷன் நடந்த பொழுது, அப்போதைய கமிஷனுக்கு எம்.ஜி.ஆர். அவர்கள் போனார். அவரிடம்தான் கேட்டார்கள். ஏன் என்றால், அன்றைக்கு அந்தப் புகார் கொடுத்தது கல்யாணசுந்தரம் அவர்களும், எம்.ஜி.ஆர். அவர்களும்தான். அதனால் கமிஷனில் விசாரணைக்கு அழைத்தார்கள். அவரிடம் கேட்டபொழுது, “எனக்கு இதைப் பற்றி ஒன்றுமே தெரியாது, சேலத்தைச் சேர்ந்த வழக்கறிஞர் கண்ணன் என்னிடத்தில் கொடுத்துக் கொடுக்கச் சொன்னார், நான் கொடுத்தேன்” என்று எம்.ஜி.ஆர். சொன்னார்.

### முரசொலி மாறன் புகழுக்கு களங்கம் கற்பிக்கிறார்!

அவ்வாறு சர்க்காரியா கமிஷனை குறிப்பிடுகிற பொழுது, உலக மாநாட்டில் இந்தியாவிற்கு பெருமைச் சேர்த்த தொழில் அமைச்சராக இருந்த அண்ணன் முரசொலி மாறனைப் பற்றி குறிப்பிடுகிறார். அதோடு மட்டுமல்ல, அவருடைய புகழுக்கு களங்கம் விளைவிக்கும் அளவிற்கு சில வார்த்தைகளை முதலமைச்சர் பயன்படுத்தினார். இது ஒரு பக்கம்.

அதன்பின் சர்க்காரியா கமிஷன் நிறைவடைகிற பொழுது, அந்த கமிஷன் என்ன சொன்னது என்றால், “28 குற்றச்சாட்டுகள் சொல்லப்பட்டது; இந்த 28 குற்றச்சாட்டுகளுக்கும் எந்தவித முகாந்திரமும் இல்லை; கொடுத்தவர்களால் நிரூபிக்கவும் முடியவில்லை. அதனால் இதை முடித்துவிட்டேன்” என்று சொல்லிவிட்டுப் போய்விட்டார்கள். கமிஷனில் ஏதாவது ஆதாரம் நிரூபிக்கப்பட்டிருந்தால் அது நீதிமன்றத்திற்குப் போயிருக்கும். அதில் ஒன்றுமே இல்லை. ஆனால், அதைக் கிளப்புகிறார்கள்.

### கேள்விகளுக்கு பதில் இல்லை!

கேட்ட கேள்வி என்ன? ‘பட்டு கோட்டைக்கு வழி கேட்டால் கொட்டைப்பாக்குக்கு பதில் சொன்னார்’ என்பது போலத்தான் நேற்று முதலமைச்சர் பதில் சொன்னார்.

அதோடு என்ன சிறப்பு என்றால், நம்முடைய அருமை அண்ணன் மாறன் அவர்களைப் பற்றி, இந்தியாவில் மட்டுமல்ல, உலகத்திற்கே தெரியும். அவருக்கு ஒரு அஞ்சல் தலை டெல்லியில் வெளியிட்டார்கள். அந்த அஞ்சல் தலை வெளியிடுகிற பொழுது, அந்தக் குடும்பத்தைச் சார்ந்த, அன்றைய அமைச்சராக இருந்த தயாநிதி மாறன் அவர்கள், இந்த முதலமைச்சரை அழைத்துக் கொண்டு டெல்லிக்குச் சென்று அந்த அஞ்சல் தலையை வெளியிட்டார்.

நான் கேட்க விரும்புவது, அண்ணன் மாறனுடைய அஞ்சல் தலையை வெளியிடப் போனீர்கள் அல்லவா? அந்தக் குடும்பத்தில் வந்து, அவர்கள் முதலாளியாக இருந்து அந்தப் படத்தில் நடித்து பணம் வாங்கினீர்கள் அல்லவா நீங்கள். இந்தச் சூழ்நிலையில், அந்தச் சுற்றுச்சூழல் அஞ்சல் தலை வெளியீடு நிகழ்ச்சியில் கலந்து கொண்ட நீங்கள், நேற்று அவரைப் பற்றி கொச்சைப்படுத்திப் பேச வேண்டிய அவசியம் என்ன?

### விதிக்குப் புறம்பாக பேசியதை நீக்க மறுப்பு!

இவையெல்லாம் நாங்கள் இன்றைக்கு ‘பூஜ்ய நேரம்’இல் பேரவைத் தலைவரைப் பார்த்து, விதிக்கு முரணாகச் சட்டமன்றத்தின் மாண்புகளை மீறி ஈ.டி. வழக்கைப் பற்றி முதலமைச்சர் பேசியது தவறு; ஜனநாயகப் போராட்டமான மிசாவைப் பற்றி நீங்கள் பாடி லாங்குவேஜோடு இங்கே கொச்சைப்படுத்தியது தவறு; சர்க்காரியா கமிஷனில் எந்தக் குற்றச்சாட்டையும் நிரூபிக்க இயலாத பொழுது, அதை எடுத்து இங்கே படித்துக் கொண்டிருப்பது தவறு; எனவே இந்த மூன்றையும் சபைக்குறிப்பில் இருந்து நீங்கள் நீக்க வேண்டும் என்று நாங்கள் கேட்டோம். ஆனால், அதை அவர்கள் நீக்க மறுத்துவிட்டார்கள்.

### ரீல்ஸ் ஆட்சி நடத்துகிறார்கள்!

நான் இன்னொரு செய்தியையும் இந்த இடத்தில் சொல்ல விரும்புகிறேன். நாங்கள் ‘ரியல்’ ஆட்சி நடத்தியவர்கள். திராவிட மாடல் ஆட்சியில் தமிழ்நாட்டின் முதலமைச்சராக இருந்த என் அண்ணன் ‘ரியல்’ ஆட்சி நடத்தினார். இப்போது ‘ரீல்’ஆட்சி நடத்துகிறார்கள். என்ன காரணம் தெரியுமா? நேற்றைய தினம் இதையெல்லாம் பேசி ‘ரீல்’ எடுத்து விட வேண்டும் என்பதற்காக!

நான் இன்னோர் சம்பவத்தையும் சொல்கிறேன். நான்கு நாட்களுக்கு முன்னால் சபாநாயகர் ஆசனத்தில் ஒரு மாற்றுத் தலைவரை உட்கார வைக்கிறார்கள். சத்திய பாமா என்கிற சட்டமன்ற உறுப்பினரை மாற்றுத் தலைவராக உட்கார வைத்திருக்கிறார்கள். என்ன ‘ரீல்ஸ்’ போட்டார்கள் தெரியுமா? “இதுவரைக்கும் சபாநாயகர் ஆசனத்தில் பெண்களே உட்கார்ந்ததே இல்லை” என்று ரீல்ஸ்போட்டார்களா, இல்லையா?

ஆனால் உண்மை நிலைமை என்ன? இதற்கு முன்னால் அக்கா பொன்னம்மாள் என்று சொல்லப்படுகிற காங்கிரஸ் தலைவி உட்கார்ந்திருக்கிறார், யசோதா உட்கார்ந்திருக்கிறார், இன்னும் சொல்லப்போனால் பொதுவுடைமை இயக்கத்தைச் சேர்ந்த கன்னியாகுமரியைச் சேர்ந்த லீமா ரோஸ் அவர்கள் உட்கார்ந்திருக்கிறார்கள் எனப் பல வரலாறுகள் உண்டு.

எனவே, நேற்றைய சம்பவம் என்பது, ‘ரீல்ஸ்’ தயாரிப்பதற்காக போடப்பட்டதே ஒழிய, எங்களுடைய நியாயமான கேள்வியை நாங்கள் சபாநாயகரிடம் கேட்கிறோம். அதைத் தீர்க்காமல், ஜனநாயக ரீதியாக கேட்டதை இன்றைக்கு அவர் மறுத்து, காவல்துறை நண்பர்களை வைத்து எங்களை பலவந்தமாகத் தூக்கி வெளியே போட்டிருக்கிறார்கள். இதுதான் நடந்து முடிந்த வரலாறு.

மேலும் சபாநாயகர் அவர்கள் நடுநிலையாகச் செயல்படாமல், இன்றைக்கு கெடுபிடியாக அவர் சர்வாதிகாரப் போக்கை கடைப்பிடித்து எங்களை வந்து தூக்கிப் போட்டது அவருடைய சர்வாதிகாரத்தின் உச்சம். சட்டமன்றத்தினுடைய ஜனநாயகம் இன்றைக்கு கெட்டுப்போய் இருக்கிறது. அதை கேட்டதன் அடிப்படையில் தான் இன்றைக்கு எங்களை தூக்கிப் போட்டிருக்கிறார்கள்.

இவ்வாறு கழக கொறடா எ.வ. வேலு பேட்டியளித்தார்.

## சட்டமன்ற விதிகளுக்கு முரணான கருத்துகளை

# சபாநாயகர் நீக்க மறுத்ததால் வெளிநடப்பு செய்கிறோம்!

## மனிதநேய மக்கள் கட்சித் தலைவர் ஜவாஹிருல்லா எம்.எல்.ஏ. பேட்டி!

சென்னை, செப். 10 -

சட்டமன்றத்தில் காவல் துறை மானிய கோரிக்கையில் பேசிய முதலமைச்சரின் சட்டமன்ற விதிகளுக்கு முரணான பேச்சுகளை சபாநாயகர் அவை குறிப்பில் இருந்து நீக்க மறுத்ததை கண்டித்து மனிதநேய மக்கள் கட்சி சட்டமன்ற உறுப்பினர் ஜவாஹிருல்லா அவையில் இருந்து வெளிநடப்பு செய்தார்.

அவைக்கு வெளியே அவர் செய்தியாளர்களிடம் கூறியதாவது:-

நேற்று முன்தினம் நடைபெற்ற சட்டமன்ற கூட்டத் தொடரில் காவல்துறை மானிய கோரிக்கையில் பேசிய முதலமைச்சர் சொன்ன கருத்துக்கள் குறித்து தி.மு.க. சட்டமன்ற கொறடா ஏ.வ.வேலு அவர்களும், சட்டமன்ற தி.மு.க. துணைத் தலைவர் கே.என். நேரு அவர்களுக்கும், பேசுவதற்கு இன்று வாய்ப்பு வழங்கப்பட்டது .

அப்போது அவர்கள் சர்க்காரியா கமிஷன் குறித்தும், மிசா சட்டம் குறித்தும் மறைந்த முரசொலி மாறன் அவர்கள் குறித்தும் முதலமைச்சர் அவர்கள் உண்மைக்கு புறம்பான கருத்துக்களை சட்டமன்றத்தில் பேசியிருக்கிறார். எனவே அவை



சட்டப்பேரவை குறிப்பில் இருந்து நீக்க வேண்டும் என்று சட்டப்பேரவை விதிகளை சுட்டிக்காட்டி, அவை விதிகளுக்கு முரணாக முதலமைச்சர் அவர்கள் ஆற்றிய உரையை நீக்க வேண்டும் என்று விளக்கம் அளித்தும், அதனை சபாநாயகர் அவர்கள் ஏற்றுக் கொள்ளாமல் நீக்க மாட்டேன் சபை குறிப்பில் இருந்து நீக்க மாட்டேன் என்று சொல்வது சரியான முடிவல்ல, சபாநாயகர் சரியான முடிவு எடுக்காமல் சட்ட விதிகளுக்கு முரணாக ஒரு தலைபட்சமாக முடிவெடுத்த காரணத்தால் அதனைக் கண்டித்து நாங்கள் வெளிநடப்பு செய்துள்ளோம்.

மேலும் திருவண்ணாமலையில் பேசிய இந்திய யூனியன் முஸ்லிம் லீக் கட்சி சட்டமன்ற உறுப்பினர் பேசிய கருத்துகள் குறித்து சட்டமன்றத்தில் அமைச்சர்கள் தவறான தகவல்களை கூறி இருக்கிறார்கள்.

திருவண்ணாமலையில் இந்திய யூனியன் முஸ்லிம் லீக் கட்சி சட்டமன்ற உறுப்பினர் கூறும்போது, வெளிப்படையாகவே பணத்தைக் கொண்டு வந்து கொடுத்தார்கள் என்று அவர் சொன்னது தி.மு.க. எம்.எல்.ஏ.க்கள் அல்ல என்பது அவர் ஆற்றிய உரையை பார்க்கும் பொழுது தெரிகிறது.

ஆனால் அதனை திசை திருப்பும் போக்கில் முழு பூசணிக்காயை சோற்றில் மறைப்பது போல் அமைச்சர்கள் பேசுகிறார்கள்.

இவ்வாறு அவர் கூறினார்.